# SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

Face book:- Social Organizations Networking for Development - (SOND)

## மாதாந்த அறிக்கை

காத்திகை, 2014

# Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

## இதழின் உள்ளே

1. யாழ்
2. மட்டக்களப்பு
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## விவசாயப் பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு யாழ் மாவட்டத்தில் **SOND** இயற்கைவிவசாயப் பண்ணை பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் வராத்துப் பழை என்னும் இடத்தில் அமைப்க்கப்பட்டுள்ளது இப் பண்ணையில் தற்போது வாழைமரங்கள் நாட்டப்பட்டுள்ளதையும் புதியபசுமைக் குடில் அமைக்கப்பட்டதையும் படத்தில் காணக்கூடியதாகஉள்ளது.






## MRE விழிப்புணர்வு

**MRE** பணியாளர்களினால் 04.11.2014 அன்று சேந்தாங்குளம் பகுதியில் கிராமமட்டத்திலான மிதிவெடிஅபாயக்கல்வி செயற்பாட்டு குழுவினருக்கும், 04.11.2014 அன்றுநாகர்கோவில் பகுதியில்பாடசாலைமட்டத்திலும், 06.11.2014 அன்றுகுட்டியப்புலம் மகாவித்தியாலயத்தில் பாடசாலைமட்டத்திலும், 08.11.2014 அன்று தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் ,13.11.2014 அன்றுபண்டத்தரிப்பு R.C.T.M.S பாடசாலையிலும் MRE விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது







"We all will Create a Better World"

SOND

## MRE விழிப்புணர்வு

இம்மாதம் **Halo Trust** அமைப்பினால் 07.11.2014 அன்று எமது SONDஅலுவலகத்தில் MRE பணியாளர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடு நடாத்தப்பட்டிருந்தது.






## MRE செயற்றிட்டம்

நாவற்குழிபகுதியில் மக்களினால் இனங்காட்டப்பட்டுளமது MRE களப்பணியாளர்களினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள வெடிக்காத வெடிநிலையில் உள்ளவெடி பொருட்களினை படங்களில் காணக்கூடியதாக உள்ளது.






**"We all will Create a Better World"**

**காலநிலை மாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental Protection)**

மேலும் பாடசாலை மட்டத்தில் இயற்கைச் சூழலை அமைக்கும் நோக்குடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட 13 பாடசாலைகளில் 10 பாடசாலைகளுக்குரிய மரக் கன்றுகள் வினியோகிக்கப்பட்டுள்ளது.

மேலும் காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளில் காலநிலை மாற்ற செயற்பாட்டுக் குழுவினது அமர்வுகளின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு மமைவாக பல்கலைக் கழக மட்டத்தில் துறைசார்ந்த பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுடனான கலந்துரையாடலில் பெறப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக அரச, அரச சார்பற்ற மற்றும் சிவில் இமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் பட்டிப்பளையிலுள்ள முதலைக்குடா கிராமத்தில் இம் மாதம் 18ம், 19ம் திகதிகளில் அனர்த்த முகாமைத்துவக் குழுவிற்கான இரண்டு நாட் கொண்ட அனர்த்த முன்னெச்சரிக்கை, முகாம் முகாமைத்துவப் பயிற்சி மற்றும் அனர்த்த முன்னாயத்த ஒத்திகை நிகழ்வும் இடம்பெற்றது. இப்பயிற்சியில் 25 பேர் பங்குபற்றியதுடன் அனர்த்த முன்னாயத்த ஒத்திகை நிகழ்வில் 150 ற்கு மேற்பட்ட கிராம மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.





# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவன மென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற் திட்டங்கள் இவற்றிற்குநல் உதாரணங்களாகும்.

### சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம்,சிங்கள இனத்தினைச் சேர்ந்த 21 ஆண்,29 பெண் உள்ளடங்கலாக 50 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள். இம் மாதம் 3 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டபோது 41 சிறுவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

இம் மாதம் சிறுவர்களினால் 3 நடமாடும் நூலகசேவை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 123 புத்தகங்கள் 15 இறுவெட்டுக்களும் தெரிவு செய்து வழங்கப்பட்டது. மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு 03 திரைப்படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளது. இதில் 60 பேர் கலந்துகொண்டுள்ளார்கள்.

### SONDஅமைப்பினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

1. சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக ,கிரிக்கெட் வெட்,வொலிவோல் ஆகிய இரண்டு வகையான விளையாட்டுப்பொருள் 10 தடவைகள் வழங்கப்பட்டது.
2. இம் மாதம் நடமாடும் நூலக சேவைக்காக 123 புத்தகங்களும், 15 இறுவெட்டுக்களும் தெரிவு செய்து வழங்கப்பட்டது.
3. சிறுவர்களுக்கு 03 திரைப்படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளது.



SOND

## பாலர் பாடசாலை

பாலர் பாடசாலை ஆசிரியர்களுடைய முன்னேற்றத்தினை அறியும் பொருட்டு 2014.11.30ம் திகதி அன்று மாலை 02.30 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 11 முன்பள்ளியைச் சேர்ந்த 22 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.





## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 9 தலைப்பில் 155 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



**"We all will Create a Better World"**

SOND

## அனுபவபகிர்வு

தேசிய மொழிகள் திட்டத்தின் திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்த கந்தளாய் பிரதேச இளைஞர் சம்மேளன குளுவினர் 2014.11.04 செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று சொண்ட் நிறுவன இளைஞர் குளுவுடன் “அனுபவபகிர்வு இடம் பெற்றுள்ளது





## விவசாயப் பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் சொண்ட் அமைப்பினால் 11 ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது இப் பண்ணையில் மாதுளை, பப்பாசி போன்ற பழங்கள் அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.







**“We all will Create a Better World”**

SOND



## தொலைநோக்கு

"புதிய சமூகம் உருவாக்குவோம்"

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

**"We all will Create a Better World"**